Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி


தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 135 உள்ளூர் - 15.05.2026 வெள்ளி விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 135 வெளியூர் - 16.05.2026 சனி Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

எஸ்.பி.ஐ. 100 காலியிடங்கள்!
சனி ஜெயந்தி அன்று (மே 16), இதை மட்டும் பண்ணாதீங்க!
உயர்ந்த பெட்ரோல், டீசல் விலை?
பிஎஃப் சந்தாதாரர்களுக்கு குட்நியூஸ்..!!

## பிரதமர் மோடி 5 நாள் வெளிநாடு சுற்றுப்பயணம்!



புதுடெல்லி, மே. 15–

பிரதமர் நரேந்திர மோடி மே 15 முதல் 20 ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே மற்றும் இத்தாலி ஆகிய 5 நாடுகளுக்கு முக்கிய வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். அதன் படி இன்று காலை அபுதாபி சென்றடைந்தார். அவருக்கு ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது சிறப்பான வரவேற்பு அளித்தார். இதைத்தொடர்ந்து நெதர்லாந்து, ஸ்வீடன் செல்லும் அவர், அந்நாட்டுப் பிரதமர்களை சந்திக்க உள்ளார். அதன் பின்னர் நார்வே செல்லும் அவர், 3–ஆவது இந்தியா–நார்டிக் உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ளார். அந்நாட்டுக்கு 43 ஆண்டுகளுக்குப் பின்னர் செல்லும் முதல் இந்திய பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது. இதைத்தொடர்ந்து அவர் இத்தாலி செல்கிறார். அமெரிக்கா – ஈரான் போர் காரணமாக மேற்காசிய நாடுகளில் பதற்றம் நிலவி வரும் சூழலில், பிரதமர் மோடியின் பயணம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இந்தப் பயணத்தின் போது ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முதல்மைச்சர் விஜய்யின் அங்கீகரிக்கப்பட்ட புகைப்படம்.. அரசு அலுவலகங்களில் காட்சிப்படுத்த உத்தரவு..!



சென்னை, மே. 15–

தமிழ்நாடு அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் அதிகாரப்பூர்வ புகைப்படம் காட்சிப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அரசு அலுவலகங்களில் முதலமைச்சர் புகைப்படங்களை காட்சிப்படுத்துவது இந்தியாவில் நீண்ட காலமாக நடைமுறையில் உள்ள ஒரு நிர்வாக மரபு. 2026 சட்டமன்ற தேர்தல் முடிவுகளுக்கு பிறகு தமிழகத்தின் 18வது முதலமைச்சராக ஜோசப் விஜய் பதவி ஏற்றுக் கொண்டார். இந்நிலையில் முதலமைச்சர் ச.ஜோசப் விஜயின் அங்கீகரிக்கப்பட்ட புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து அரசு அலு வலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் பிற அரசு கட்டிடங்களில் முத லமைச்சரின் அதிகாரப்பூர்வ புகைப்படத்தை காட்சிப்ப டுத்த வேண்டும் என அனைத்து துறைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், அரசு நிகழ்ச்சிகள் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்காக ஒரே மாதிரியான அங்கீகரிக்கப்பட்ட புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, ரேஷன் கடைகள் உள்ளிட்ட பொதுச் சேவை மையங்களிலும் முதலமைச்சரின் படம் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மே மாத மகளிர் உரிமைத்தொகை வரவு வைப்பு!





சென்னை, மே 15–

கடந்த 2021ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்ற திமுக மகளிருக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000 உரிமைத்தொகை வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்தது. அதன்படி, ஆட்சிக்கு வந்த 2 ஆண்டுகளுக்குப்பின் 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் தேதி முதல் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை அரசு அமல்படுத்தியது. அதன்படி, 1 கோடியே 31 லட்சம் பெண்கள் பயனாளிகளாக கண்டறியப்பட்டு மாதம் தோறும் 15ம் தேதி அவர்களில் வங்கி கணக்குகளில் தலா ரூ.1,000 உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றியது. புதிய அரசு ஆட்சியமைத்துள்ள நிலையில் வழக்கம்போல் பயனாளர்களுக்கு மே மாதத்திற்கான மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 1 கோடியே 31 லட்சம் பெண் பயனாளர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 இன்று காலை வரவு வைக்கப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைத்தொகை வரவு வைக்கப்படும் என்று முதல்–அமைச்சர் விஜய் நேற்று கூறியிருந்த நிலையில் மே மாதத்திற்கான உரிமைத்தொகை இன்று வரவு வைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அரசு பள்ளிகளில் பயின்று உயர் கல்வி தொடரும் மாணவிகளுக்கான புதுமை பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கான தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தலா ரூ.1,000 உதவித்தொகை மாணவ–மாணவியரின் வங்கி கணக்கில் தவெக அரசால் நேற்று வரவு வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## நீட் மறுதேர்வு தேதி அறிவிப்பு.. மீண்டும் விண்ணப்பிக்க வேண்டுமா? NTA அதிரடி அறிவிப்பு!






புதுடெல்லி, மே. 15–

நாடு முழுவதும் நீட் மறுதேர்வு ஜூன் 21ஆம் தேதி நடைபெறும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. வினாத்தாள் கசிவு காரமணாக மே 3ஆம் தேதி நடந்த இளநிலை நீட் தேர்வை தேசிய தேர்வு முகமை ரத்து செய்தது. இந்த நிலையில், தற்போறு மறுதேர்வு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, மே 3ஆம் தேதி நடந்த நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாக தேசிய தேர்வு முகமை அறிவிப்பை வெளியி ட்டது. மாணவர்கள் நீட் மறுதேர்வு தேதிக்காக காத்திருந்தனர். இந்த நிலையில், இன்று (மே 15) தேசிய தேர்வு முகமை நீட் மறுதேர்வு தேதி குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது, நீட் மறுதேர்வு ஜூன் 21ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நீட் இளநிலை மறுதேர்வுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்க தேவையில்லை. மே 3ஆம் தேதி நடந்த தேர்வுக்ககான விண்ணப்ப படிவம், தேர்வு மையத்திற்கான இடங்கள் சான்றிதழை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே, எழுதிய தேர்வு மையத்திலேயே மாணவர்கள் நீட் மறுதேர்வை எழுதலாம்.

நீட் மறுதேர்வுக்கு மாணவர்கள் கூடுதலாக எந்த கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே செலுத்தப்பட்ட தேர்வு கட்டணமும் திருப்பி அளிக்கப்படும் என தேசிய தேர்வு முகமை ஏற்கனவே தெரிவித்து இருந்தது. எனவே, மாணவர்கள் நீட் மறுதேர்வுக்கு விண்ணப்பிக்க தேவையில்லை என்பதை மாணவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட் மட்டும் என்டிஏ வெளியிடும். தேசிய தேர்வு முகமையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வர்கள், பெற்றோர்கள் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை மட்டுமே நம்ப வேண்டும் என்றும் சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகளை நம்ப வேண்டாம் என கூறியிருக்கிறது. நீட் மறுதேர்வு குறித்த ஏதேனும் சந்தேகம் இருந்தால் 011–40759000 / 011–69227700 என்ற எண்ணை தொடர்பு கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீட் வினாத்தாள் முறைகேடுகளை தடுக்கும் வகையில்

# 2027 முதல் நீட்-யுஜி தேர்வு!

## இனி இணையவழி வடிவத்தில்!!







சென்னை, மே. 15–

அடுத்தாண்டு முதல் ஆன்லைனில் நீட் தேர்வு நடத்தப்படும் என மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

நீட் வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளை தடுக்கும் வகையில், அடுத்த ஆண்டு முதல் நீட்–யுஜி (NEET–UG) தேர்வு கணினி வழித் தேர்வு (CBT) என்ற இணையவழி வடிவத்திற்கு மாற்றப்படும் என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உறுதிப்படுத்தினார்.

வினாத்தாள் கசிவு குற்றச்சாட்டுகளின் காரணமாக முதல் தேர்வு ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புதிய நீட்–யுஜி தேர்வு ஜூன் 21 அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான், அடுத்த ஆண்டு முதல் இணையவழித் தேர்வு முறை: வெளிப்படையான, பாதுகாப்பான மற்றும் மோசடி இல்லாத தேர்வு முறையை உறுதி செய்வதற்காக, ஓஎம்ஆர் தாள்களுக்குப் பதிலாக கணினி அடிப்படையிலான தேர்வு (CBT) முறை செயல்படுத்தபபடும் என அறிவித்துள்ளார்.

மேலும், ரத்து செய்யப்பட்ட நீட்–யுஜி தேர்வு, ஜூன் 21, 2026 அன்று மீண்டும் நடத்தப்படும். இதற்கு முன்பே பதிவு செய்த விண்ணப்பதாரர்களிடமிருந்து கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது. மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை: தேசிய தேர்வு முகமையில் (NTA) மேம்பாடுகள் செய்யப்படும் என்றும், சமீபத்திய வினாத்தாள் கசிவுகளில் ஈடுபட்ட எந்தவொரு மாஃபியா அல்லது தனிநபர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

**செயல்படுத்தக்கூடிய வழிமுறைகள்:**

அதிகாரப்பூர்வ அறிவிப்புகள், அனுமதி அட்டை மறு வெளியீட்டு விவரங்கள் மற்றும் தேர்வு மைய ஒதுக்கீ டுகள் போன்றவற்றை அறிந்துகொள்ள, மாணவர்கள் தேசிய தேர்வு முகமையையோ அல்லது அதிகாரப்பூர்வ நீட் யுஜி இணையதளத்தையோ கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், இந்திய தொழிற் கூட்டமைப்பின் (Confederation of Indian Industry) தென் மண்டல தலைவர் பி. ரவிச்சந்திரன், தமிழ்நாடு தலைவர் சி. தேவராஜன், துணைத் தலைவர் ஜெ. முருகவேல், தென் மண்டல முன்னாள் தலைவர் எம். பொன்னுசாமி, தமிழ்நாடு முன்னாள் தலைவர் சங்கர் வானவராயர், தமிழ்நாடு இயக்குநர் மற்றும் தலைவர் பி. ஜெய்கிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தொழிற்துறை வளர்ச்சி, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் கொள்கை ரீதியிலான பங்களிப்பு ஆகியவற்றில் தமிழ்நாடு அரசுடன் இந்தியத் தொழிற் கூட்டமைப்பு கொண்டுள்ள நீண்டகாலக் கூட்டாண்மை குறித்தும், தொழில் தொடங்குவதை எளிதாக்குவதற்கான நடவடிக்கைகள் மற்றும் மாநிலத்தின் நிலையான பொருளாதார மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவளிப்பது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

## அரசு ஊழியர் போல் மதிய உணவை கையில் எடுத்துவரும் முதல்-அமைச்சர் விஜய்: அதிகாரிகள் பாராட்டு!



சென்னை, மே. 15–

தமிழகத்தின் 12–வது முதல்–அமைச்சராக ஜோசப் விஜய் கடந்த 10–ந்தேதி பதவியேற்றுக் கொண்டார். பதவியேற்பு விழா காலை 10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில், விழா நிகழ்விடமான நேரு உள்விளையாட்டு அரங்கத்திற்கு காலை 8.48 மணிக்கே முதல்–அமைச்சர் விஜய் வருகை தந்தார். மறுநாள் (11–ந் தேதி) காலை 9.30 மணிக்கு சட்டசபையில் நடைபெற்ற எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்பு விழாவுக்கு காலை 8.45 மணிக்கே தலைமைச் செயலகம் வந்தார். 12–ந்தேதி சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்தல் சட்டசபையில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. இதில் கலந்துகொள்ள 8.55 மணிக்கு விஜய் அவைக்கு வந்தார். அடுத்த நாள் (13–ந்தேதி) காலை 9.30 மணிக்கு சட்டசபையில், அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்ற நிலையில், அதில் பங்கேற்க காலை 9 மணிக்கே முதல்–அமைச்சர் விஜய் தலைமைச் செயலகம் வருகை தந்தார். 3 நாட்கள் நடைபெற்ற சட்டசபை கூட்டம் நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையில், நேற்று முதல் தனது வழக்க மான பணியை மேற்கொள்ள முதல்–அமைச்சர் விஜய் தலைமைச் செயலகம் வந்தார். அரசு ஊழியர் போல காலை 9.55 மணிகே தலைமைச் செயலகம் வருகை தந்த முதல்–அமைச்சர் விஜய், மாலை 4 மணி வரை தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

மதிய உணவையும் காலையிலேயே கையோடு கொண்டுவந்த அவர், தலைமைச் செயலகத்திலேயே தனது அறையில் உணவு சாப்பிட்டார். பின்னர், மாலை 4 மணிக்கு, தனது பணிகளை முடித்துக்கொண்டு முதல்–அமைச்சர் விஜய் வீடு திரும்பினார். அரசு ஊழியர் போல், அவர் வந்து சென்றதற்கு அதிகாரிகள், போலீசார் பாராட்டு தெரிவித்தனர்.

தலையங்கம் மதுரை மணி

வெள்ளிக்கிழமை 15.05.2026

விசுவாவசு தமிழ் வருடம்

வைகாசி மாதம் 01-ம் தேதி

# தொடங்கியதா? இந்திய மக்களுக்கு மோசமான காலம்?




இந்தியாவின் மொத்த விலை பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் எதிர்பாராத விதமாக 8.3% ஆக உயர்ந்து, கடந்த மூன்றரை ஆண்டுகளில் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது. ஈரான் மோதல் காரணமாக அதிகரித்த எரிசக்தி செலவுகள், எரிபொருள் மற்றும் உற்பத்திப் பொருட்களின் விலைகள் உயர்ந்ததே இதற்குக் காரணம் என அரசின் பணவீக்க தரவுகள் கூறுகின்றன. உலகளாவிய கச்சா எண்ணெய் விலைகள் கணிசமாக உயர்ந்தபோதிலும், பெட்ரோல், டீசல் மற்றும் வீட்டு உபயோக சமையல் எரிவாயுவின் சில்லறை விலைகளை அரசாங்கம் பெரும்பாலும் மாற்றாமல் வைத்துள்ளது. இதனால் குடும்பங்கள் எரிபொருள் விலை உயர்வின் உடனடித் தாக்கத்திலிருந்து காப்பாற்றப்பட்டன. இருப்பினும், வணிக ரீதியிலான எல்பிஜி சிலிண்டர் விலைகள் அதிகரித்துள்ளன, இது டீ, காபி, உணவுகளின் விலை உயர்வுக்கு வித்திட்டது. ராய்ட்டர்ஸ் நிறுவனம் 4.4% என பணவீக்கத்தை கணித்திருந்த நிலையில், அதற்கு மாறாக வந்துள்ளது.

முன்னதாக, மார்ச் மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் 3.88% ஆகவும், பிப்ரவரியில் 2.13% ஆகவும் இருந்தது. மொத்த விலை குறியீட்டெண் (WPI) அடிப்படையிலான பணவீக்கம், முந்தைய மாதமான மார்ச் 2026 உடன் ஒப்பிடுகையில் 3.86% அதிகரித்துள்ளது. "2026 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட இந்த நேர்மறையான பணவீக்க விகிதம், கச்சா பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, அடிப்படை உலோகங்கள், பிற உற்பத்தி மற்றும் உணவு அல்லாத பொருட்களின் விலைகள் அதிகரித்ததே முக்கிய காரணம்" என்று மத்திய அரசு குறிப்பிட்டது.

"அதிகரித்து வரும் தளவாட, சரக்கு மற்றும் பொதுப் பொருட்களின் விலைகள் மொத்த விலை பணவீக்கத்தில் அதிகம் பிரதிபலிக்கின்றன. இது காலப்போக்கில் நுகர்வோர் பணவீக்கத்திற்கும் பரவக்கூடும். செலவு உயர்வை முழுமையாக நுகர்வோரிடம் கடத்த முடியாவிட்டால், உற்பத்தி மற்றும் தொழில்துறை நிறுவனங்களுக்கு இது லாப அழுத்தத்தை உருவாக்கும்"

மேலும், "உலக கச்சா எண்ணெய் விலைகளில் நிச்சயமற்ற தன்மை, விநியோகச் சங்கிலி தடங்கல்கள் மற்றும் நாணய பலவீனம் காரணமாக, மொத்த விலை பணவீக்கம் அதிகரித்து, நிலையற்றதாகவே இருக்கும், குறிப்பாக புவிசார் அரசியல் பதட்டங்கள் தொடரும் பட்சத்தில் இந்த நிலை நீடிக்கும்" என்றும் அவர் எச்சரித்தார்.இந்த மொத்த விலை உயர்வுக்கு கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருள் விலைகளே முக்கிய உந்துசக்தியாகும். எரிபொருள் தொகுதியில் இருந்துதான் அதிகபட்ச அழுத்தம் உருவானது. இந்தியாவின் சில்லறை பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 3.48% ஆக உயர்ந்தது, இதில் உணவுப் பொருட்களின் விலைகள் உறுதிப்பட்டதும் ஒரு காரணமாகும். ஏப்ரல் மாதத்தில் எரிபொருள் மற்றும் மின்சாரத் தொகுப்பில், முக்கிய எரிசக்திப் பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்தன. மார்ச் மாதத்தில் 1.54% குறைந்திருந்த எல்பிஜி பணவீக்கம், 10.92% ஆக உயர்வுகண்டது. அதேசமயம், பெட்ரோல் பணவீக்கம் முந்தைய மாதம் 2.50% ஆக இருந்ததிலிருந்து 32.40% ஆகவும், அதிவேக டீசல் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 3.26% ஆக இருந்ததிலிருந்து 25.19% ஆகவும் அதிகரித்துள்ளன. புவிசார் அரசியல் பதட்டங்களுக்கு மத்தியில் உலகளாவிய எண்ணெய் விலைகள் அதிகரித்ததால், எரிபொருள் மற்றும் மின்சாரப் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 1.05% ஆக இருந்ததிலிருந்து ஏப்ரலில் 24.71% ஆக உயர்ந்தது. கச்சா பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுப் பணவீக்கம் 67.18% ஆகவும், பெட்ரோல் பணவீக்கம் 32.4% ஆகவும், அதிவேக டீசல் 25.19% ஆகவும் அதிகரித்த மாதாந்திர அடிப்படையில் பார்த்தால், எரிபொருள் மற்றும் மின்சார விலைகள் 18.22% உயர்ந்து மொத்த விலை உயர்வில் ஒரு பெரிய பங்கை கொண்டுள்ளன. எரிசக்தி செலவுகளின் அதிகரிப்பு தொழிற்சாலை விலைகளிலும் பரவி, உற்பத்தி செலவுகளுக்கு வேகமூட்டியுள்ளது.உற்பத்திப் பொருட்களின் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 3.39% ஆக இருந்ததிலிருந்து ஏப்ரலில் 4.62% ஆக அதிகரித்தது. இரசாயனங்கள், ஜவுளி, இயந்திரங்கள் மற்றும் அடிப்படை உலோகங்கள் ஆகியவற்றின் விலையேற்றமே இதற்கு முக்கிய காரணமாகும். குறிப்பாக, அடிப்படை உலோகங்களின் பணவீக்கம் 7% ஆகவும், இரசாயனங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் பணவீக்கம் 5.09% ஆகவும் உயர்ந்தன.

# புதுச்சேரி சென்டாக் மாணவர் சேர்க்கை தொடக்கம்: 10,810இடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் - ரங்கசாமி அறிவிப்பு!



புதுச்சேரி, மே. 15–

புதுச்சேரியில் 2026–2027ஆம் கல்வியாண்டிற்கான நீட் (NEET) அல்லாத இளநிலை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை முதலமைச்சர் ரங்கசாமி வியாழக்கிழமை முறைப்படி தொடங்கி வைத்தார். மொத்தம் 10,810 இடங்களுக்கான இந்தச் சேர்க்கை செயல்முறைக்கு, தகுதியுள்ள மாணவர்கள் இன்று (மே 14) மாலை 4 மணி முதல் மே 29–ஆம் தேதி மாலை 5 மணி வரை சென்டாக் இணையதளத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி சென்டாக் (CENTAC) நிர்வாகம் வெளியிட்டுள்ள விளக்கக் குறிப்பேட்டின்படி, இளநிலை தொழில்முறை படிப்புகள், கலை, அறிவியல், வணிகவியல் மற்றும் நுண்கலை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை இன்று (மே 15) தொடங்குகிறது. இதற்கான தகவல் கையேட்டை முதலமைச்சர் ரங்கசாமி இன்று வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் வளர்ச்சித் துறை ஆணையர் கிருஷ்ணமோகன் உப்பு மற்றும் கல்வித்துறைச் செயலாளர் முகமது ஹாசன் அபித் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இடங்கள் ஒதுக்கீடு விவரம்: நீட்–அல்லாத தொழில்முறை படிப்புகள் (6,490 இடங்கள்): பொறியியல், செவிலியர், துணை சுகாதார அறிவியல், வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கால்நடை அறிவியல் கலை மற்றும் இதர படிப்புகள் (4,320 இடங்கள்): கலை, அறிவியல், வணிகவியல், நுண்கலை, தொழிற்கல்வி மற்றும் ராஷ்டிரிய ரக்ஷா பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் பாதுகாப்பு, குற்றவியல், தடய அறிவியல் போன்ற சிறப்பு படிப்புகள்.

முக்கியத் தேதிகள்:

விண்ணப்பப் பதிவு தொடக்கம்: 14.05.2026 (மாலை 4:00 மணி முதல்)

விண்ணப்பிக்க கடைசித் தேதி: 29.05.2026 (மாலை 5:00 மணி வரை) ஆர்வமுள்ள மாணவர்கள் www.centacpuducherry.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் விரிவான தகவல்களை அறிந்து கொண்டு விண்ணப்பிக்க லாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 10-ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள்; முக்கிய அப்டேட்ஸ்!



சென்னை, மே. 15–

தமிழ்நாடு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மார்ச் 11 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 06 ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்த நிலையில், மாணவர்கள் அனைவரும் தங்களின் தேர்வு முடிவுகளுக்காக காத்திருக்கின்றனர். வரும் 20 ஆம் தேதி தேர்வு முடிவுகள் https://tnresults.nic.in/ என்ற இணையத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக வெளியாகும் அப்டேட்கள் மாணவர்கள் தங்கள் தேர்வு நுழைவுச் சீட்டில் (Hall Ticket) உள்ள விவரங்களைத் தயாராக வைத்துக் கொள்ளு மாறு அறிவுறுத்தப்படு கிறார்கள்.

தமிழ்நாடு 10 ஆம் வகுப்பு துணைத் தேர்வு தேதிகள்;

தமிழ்நாடு 10 ஆம் வகுப்பு துணைத் தேர்வு (Supplementary Exam) 2026, ஜூலை மாதத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு 10 ஆம் வகுப்பு மறுமதிப்பீடு முடிவு;

தமிழ்நாடு 10 ஆம் வகுப்பு மறுமதிப்பீடு முடிவுகள் (re–valuation result) ஜூன் மாதம் வெளியாகும் என தெரிகிறது.

# கோடிக்கணக்கான பிஎஃப் சந்தாதாரர்களுக்கு குட்நியூஸ்..!! எல்லாமே மாறுது!! மேஜர் அப்டேட்!!




புதுடெல்லி, மே. 15–

இந்தியாவை சேர்ந்த கோடிக்கணக்கான பிஎஃப் சந்தாதாரர்களுக்கு ஒரு நல்ல செய்தி வந்து இருக்கிறது. பிஎஃப் சந்தாதாரர்கள் தங்களுடைய பிஎஃப் இறுதித் தொகையை திரும்ப பெறுவதற்கான நடைமுறையை விரைவில் தானியங்கி முறைக்கு மாற்ற இருக்கிறார்களாம். அதாவது Auto Settlement முறைக்கு மாற்ற உள்ளனர். எனவே பிஎஃப் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களின் இறுதித் தொகையை எடுப்பதற்காக விண்ணப்பம் செய்யும்போது எந்த வித தாமதமும் இல்லாமல் அவர்களின் வங்கி கணக்குகளுக்கு உடனடியாக பணம் சென்றடையும் வகையில் மாற்றம் கொண்டுவரப்படுவதாக மத்திய வருங்கால வைப்பு நிதி ஆணையத்தின் தலைவர் ரமேஷ் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

தற்போது பிஎஃப் கணக்கிலிருந்து 5 லட்சம் ரூபாய் வரையில் பகுதி அளவு தொகை எடுக்க மட்டுமே ஆட்டோ செட்டில்மெண்ட் எனப்படும் தானியங்கி முறை செயல்பாட்டில் இருக்கிறது. இதன்படி இந்த ஆட்டோ செட்டில்மெண்ட் பிரிவின் கீழ் நாம் விண்ணப்பம் செய்யும்போது மூன்று நாட்களுக்குள் நாம் விண்ணப்பம் செய்த தொகையானது நம் அக்கவுண்டிற்கு வந்துவிடுகிறது. இந்த வேகமான வசதியை இனி பிஎஃப் கணக்கை முழுமையாக முடித்து பணத்தை பெரும் இறுதி தீர்வு முறைக்கும் விரிவுபடுத்த இபிஎஃப்ஓ திட்டமிட்டு இருக்கிறது என அவர் கூறுகிறார். அதேபோல பணியாளர்கள் ஒரு நிறுவனத்தில் இருந்து மற்றொரு நிறுவனத்திற்கு மாறும்போது பழைய பிஎஃப் கணக்கில் உள்ள தொகையை புதிய கணக்குக்கு மாற்ற இனி தனியாக விண்ணப்பம் செய்ய வேண்டிய தேவை இல்லை. பழைய கணக்கில் இருக்கும் தொகை தானாகவே புதிய கணக்குக்கு மாற்றப்படும் வசதியும் அறிமுகமாக இருக்கிறதாம். மத்திய அரசின் நான்கு புதிய தொழிலாளர் சட்டங்களின் கீழ் இபிஎஃப்ஓ தொடர்பான புதிய விதிகள் விரைவில் வெளியிடப்படும் என ஆணையர் ரமேஷ் கிருஷ்ண மூர்த்தி கூறியுள்ளார்.

# ராமேசுவரம் கோவிலில் இலவச லட்டு வழங்கியதில் ரூ.3.5 கோடி மோசடி!



ராமேசுவரம், மே. 15–

ராமேசுவரம் ராமநாதசாமி கோவிலுக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். பக்தர்களுக்கு தினமும் இலவசமாக லட்டு பிரசாதம் கோவில் நிர்வாகம் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இலவச லட்டு வழங்கியதில் பெரும் மோசடி நடந்ததாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக கோவில் இணை ஆணையர் செல்லத்துரை தலைமையில் கடந்த சில நாட்களாக தீவிரமாக விசாரணை நடைபெற்றது. இதுகுறித்து கோவில் இணை ஆணையர் செல்லத்துரை கூறியதாவது:–

ராமேசுவரம் கோவிலில் அரசு உத்தரவுப்படி நாள்தோறும் பக்தர்களுக்கு இலவசமாக லட்டு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த 2023–ம் ஆண்டு முதல் தற்போது வரை 3 ஆண்டுகளில் மட்டும் 22 லட்சத்து 71 ஆயிரம் லட்டுகள் வழங்கியதில் சுமார் ரூ.3 கோடியே 40 லட்சம் வரை மோசடி நடைபெற்றது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக கோவில் பிரசாத பிரிவு பேஸ்கார் பஞ்சமூர்த்தி, பணியாளர் விக்ரம், பிரசாத கடையில் பணியாற்றிய சிவனேஸ்வரி, விற்பனையாளர் செல்வி, விற்பனை பிரசாத பிரிவு பொறுப்பாளர் லாவண்யா, இலவச லட்டு பிரிவு அம்பிகா ஆகிய 6 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். மேலும், தற்காலிக பணியாளர்கள் பிரபு ரவி, நித்தியானந்தம், பாலாஜி ஆகிய 3 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இவ்வாறு அவர் கூறினார். இந்த சம்பவம் பக்தர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# சாமானிய மக்களுக்கு அடுத்த ஷாக்..! CNG விலையும் உயர்வு..!




புதுடெல்லி, மே. 15–

மேற்கு ஆசியாவில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் போரின் பின்னணியில், ஹார்முஸ் ஜலசந்தி முற்றுகை தொடர்ந்து வருவதால், பெட்ரோல் மற்றும் டீசல் விலையேற்றத்தைத் தொடர்ந்து, சிஎன்ஜி (CNG) விலையும் ரூ.2 உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

நகரம் வாரியான புதிய விலைகள் (தோராயமாக):

டெல்லி: ஒரு கிலோ சிஎன்ஜி–யின் விலை தற்போது ரூ. 77.59–ஐ எட்டியுள்ளது.

மும்பை: இங்கு விலை சுமார் ரூ. 82.27–ஆக உயர்ந்துள்ளது. தெலுங்கு மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களிலும் கூட, போக்குவரத்துச் செலவுகளைப் பொறுத்து விலைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.



# சனி ஜெயந்தி அன்று (மே 16), இதை மட்டும் பண்ணாதீங்க!



இந்து மதத்தில், சனி பகவான் 'நீதியின் கடவுள்' மற்றும் 'கர்மங்களை அளிப்பவர்' என்று அறியப்படுகிறார். மக்களின் நற்செயல்களுக்கும் தீய செயல்களுக்கும் வெகுமதி அளிப்பதே சனி பகவானின் பணியாகும்.

இந்த ஆண்டு, சனி ஜெயந்தி மே 16, சனிக்கிழமை அன்று கொண்டாடப்படுகிறது. இந்த நாள் ஜ்யேஷ்ட அமாவாசை மற்றும் வாத சாவித்திரி விரதத்துடன் ஒரே நாளில் அமைவது ஒரு சிறப்பு வாய்ந்த நாளாகும்.

**சனி ஜெயந்தியின் சிறப்பு மற்றும் பின்னணி:**

மத நம்பிக்கைகளின்படி, சூரியதேவன் மற்றும் சாயாதேவியின் மகனான சனி, ஜேஷ்ட மாதத்தின் முதல் அமாவாசை நாளில் பிறந்தார். இந்த நாளில், பக்தர்கள் சனி கோவில்களுக்குச் சென்று எண்ணெய் அபிஷேகம் செய்வதும், கருப்பு எள் சமர்ப்பிப்பதும், சனி மந்திரங்களை உச்சரிப்பதும் வழக்கமாக உள்ளது. சனி ஜெயந்தி அன்று சனியை பக்தியுடன் வழிபடுவதால், ஜாதகத்தில் உள்ள சனியின் ஏழரைச் சதி, தையா மற்றும் சனி தோஷத்தின் அசுப விளைவுகளைக் குறைக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

**சனி ஜெயந்தி அன்று செய்யக்கூடாத தவறுகள்:**

இந்த நாளில் அறியாமல் தவறான காரியங்களைச் செய்வது சனியின் கண் திருஷ்டிக்கு வழிவகுக்கும். எனவே, பின்வரும் விஷயங்களைத் தவிர்க்கவும்:

**பலவீனர்களின் அவமானம்:** சனி பகவான் உழைக்கும் வர்க்கத்தையும் ஏழைகளையும் குறிக்கிறார். உதவியற்றவர்களையோ ஏழைகளையோ தவறாக நடத்துபவர்கள் மீது சனி மிகவும் கோபமடைகிறார்.

**புனிதப் பொருட்களை அவமதித்தல்:** கடுகு எண்ணெய், கருப்பு எள் மற்றும் இரும்பு ஆகியவை சனிக்கிரகத்திற்கு உகந்த பொருட்கள். இவற்றை உதைக்கவோ அல்லது எறியவோ கூடாது.

**அசைவ உணவு உட்கொள்ளுதல்:** இந்தப் புனித நாளில் இறைச்சி மற்றும் மது அருந்துவது எதிர்மறை ஆற்றலை அதிகரிக்கிறது. இந்த நாளில் முற்றிலும் சாத்விகமான உணவை உண்பது நல்லது.

**பொய்களும் வஞ்சனையும்:** சத்தியத்தின் கடவுளான சனியின் நாளில் ஒருவருக்குத் துரோகம் செய்வதோ அல்லது பொய் சொல்வதோ, சனியின் கொடுமையான பார்வையை வரவழைத்துக் கொள்வதைப் போன்றது.

**வனவிலங்குகளுக்குத் தீங்கு விளைவித்தல் :** இந்நாளில் மரங்களை வெட்டுவதும், விலங்குகளுக்குத் தீங்கு விளைவிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. காகங்களுக்கும் கருப்பு நாய்களுக்கும் உணவளிப்பது மிகவும் மங்களகரமானதாகும்.

**வீட்டில் அமைதியும் ஒழுக்கமும்:**

சனி பகவான் ஒழுக்கத்தின் கடவுள். சனி ஜெயந்தி அன்று வீட்டில் சண்டையிடுவது, கத்துவது அல்லது ஒருவரையொருவர் திட்டிக்கொள்வது வீட்டில் அமைதியின்மையைக் கொண்டுவரும். அமைதியான மற்றும் புனிதமான சூழல் சனியின் ஆசீர்வாதங்களுக்கு வழிவகுக்கிறது.

இந்நாளின் பலன்களைப் பெற, பின்வரும் காரியங்களை விடாமுயற்சியுடன் செய்யுங்கள்:

**விளக்கு வழிபாடு:** சூரியன் மறைந்த பிறகு, ஆரளி மரத்தின் அடியில் கடுகு எண்ணெய் விளக்கை ஏற்றவும். மந்திரம் ஓதுதல்: 'ஓம் ஷம் ஷனைச்சராய நமஹ' என்ற மந்திரத்தை 108 முறை சொல்லவும்.

**தொண்டு:** தேவை உள்ளவர்களுக்கு கருப்பு எள், உளுந்து, குடைகள் அல்லது எண்ணெய் ஆகியவற்றை நன்கொடையாக அளியுங்கள்.

**அனுமன் வழிபாடு:** அனுமன் சாலிசாவை உச்சரிப்பது சனி தோஷத்தின் தீவிரத்தைக் குறைப்பதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**உணவு:** பசித்தவர்களுக்கும் விலங்குகளுக்கும் உணவளிக்கவும்.

## கீரனூர் முதல்நிலை பேரூராட்சி
## திண்டுக்கல் மாவட்டம்.

**தூய்மை இந்தியா இயக்கம் அறிவிப்பு**

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி திண்டுக்கல் மாவட்டம், கீரனூர் முதல்நிலை பேரூராட்சியை Garbage Free City GFC 3 Star–க்கு விண்ணப்பிக்கும் பொருட்டு கீரனூர் பேரூராட்சியின் மன்ற ஒப்புதல் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கீரனூர் முதல்நிலை பேரூராட்சியை குப்பையற்ற நகரம் Garbage Free City GFC 3 Star பேரூராட்சியாக அறிவித்திட தங்கள் மேலான கருத்துருக்கள், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் செயல் அலுவலர், கீரனூர் முதல்நிலை பேரூராட்சி, 3வது வார்டு, எல்.எப். மெயின் ரோடு, கீரனூர் 624617 என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது eoknrtp@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ 18.05.2026 மாலை 6.00 மணிக்குள் தெரிவிக்கலாம் என இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**செயல் அலுவலர்,**
கீரனூர் முதல்நிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

வெ.ஆ.எண்:166/ செ.ம.தொ.அ./
திண்டுக்கல் நாள்: 14.05.2026




## உங்கள் கால் விரல்கள் இப்படி இருந்தால் அதை அலட்சியப்படுத்தாதீங்க..!



நமது உடலில் ஏற்படும் மிகச்சிறிய மாற்றங்கள் கூட, சில சமயங்களில் பெரிய உடல்நலப் பிரச்சினைகளுக்கான அறிகுறிகளாகஅமையலாம். பலரும் தங்கள் கால்களிலோ அல்லது கால் விரல்களிலோ வளரும் முடியை, வெறும் அழகு சார்ந்த ஒரு பிரச்சினையாகவே கருதுகின்றனர். குறிப்பாகப் பெண்களும், சில ஆண்களும் இம்மடிகளை அகற்றவே முயல்கின்றனர். ஆனால், நமது கால் விரல்களில் வளரும் அந்தச் சிறிய முடிகள், நமது இதய ஆரோக்கியம் மற்றும் இரத்த ஓட்ட மண்டலம் குறித்த முக்கியமான தகவல்களை வழங்கக்கூடும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

நமது இதயம் உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் இரத்தத்தை உந்தித் தள்ளுகிறது. அந்த இரத்தத்தின் வாயிலாகவே, ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்கள் உடலின் செல்களுக்குச் சென்றடைகின்றன. கால்கள்—குறிப்பாகக் கால் விரல்கள்—இதயத்திலிருந்து மிகத் தொலைவில் அமைந்துள்ள உறுப்புகளாக இருப்பதால், அவற்றுக்கு இரத்த ஓட்டம் சீராகச் சென்றடைவது மிகவும் அவசியமாகும்.

ரத்த ஓட்டம் சீராக இருக்கும்போது மட்டுமே, சருமம் ஆரோக்கியமாக இருக்கும்; முடிகளும் இயல்பாக வளரும். மாறாக, இரத்தக் குழாய்கள் சுருங்குதல், கொலஸ்ட்ரால் படிதல் அல்லது இதயத்தின் செயல்பாடு குறைதல் போன்ற பிரச்சினைகள் ஏதேனும் இருந்தால், இரத்தமானது கால்களின் நுனிப்பகுதிகளுக்குச் சரியாகச் சென்றடைவதில்லை. இத்தகைய சூழல்களில் தென்படும் ஆரம்பகால மாற்றங்களில் ஒன்று, கால் விரல்களில் வளரும் முடிகளின் அடர்த்தி குறைவதாகும்.

நிபுணர்களின் கூற்றுப்படி, கால் விரல்களில் திடீரென முடி உதிர்வது அல்லது புதிய முடிகள் வளராமல் இருப்பது, 'பெரிஃபெரல் ஆர்டரி டிசீஸ்' (Peripheral Artery Disease PAD) எனப்படும் நோயின் ஆரம்பகால அறிகுறியாக இருக்கலாம். இந்நோயில், இரத்தக் குழாய்களுக்குள் கொழுப்பும் கொலஸ்ட்ராலும் படிந்து, ரத்த ஓட்டத்தைத் தடைசெய்கின்றன.

இதனால், கால்களுக்குப் போதுமான அளவு இரத்தம் கிடைப்பது தடுக்கப்படுகிறது. வகை 2 நீரிழிவு நோய் மற்றும் இன்சுலின் எதிர்ப்புத் திறன் (Insulin Resistance) கொண்டவர்களுக்கும் இரத்தக் குழாய்கள் பலவீனமடையும் வாய்ப்புள்ளது. இது கால்களுக்கு ஆக்ஸிஜன் சீராகச் சென்றடைவதைத் தடுத்து, முடி உதிர்வதற்கு வழிவகுக்கிறது.

கால்களில் முடி உதிர்வதை மட்டும் கவனிக்க வேண்டியதில்லை; கவனிக்கப்பட வேண்டிய வேறு சில அறிகுறிகளும் உள்ளன. கால்கள் எப்போதும் குளிர்ச்சியாகவே இருத்தல், நடக்கும்போது கால் தசைகளில் வலி ஏற்படுதல், படிக்கட்டுகளில் ஏறும்போது கால்களில் அழுத்தம் அல்லது இறுக்கம் ஏற்படுதல், பாதங்களின் சருமம் பளபளப்பாகவும் மெல்லியதாகவும் மாறுதல், மற்றும் சிறிய காயங்கள் ஏற்பட்டால் அவை விரைவாக ஆறாமல் இருத்தல் போன்ற பிரச்சினைகளை நீங்கள் கவனித்தால், உடனடியாக மருத்துவக் கவனம் செலுத்த வேண்டும். இவை அனைத்தும் இரத்த ஓட்ட மண்டலத்தில் ஏதோ பிரச்சினை இருப்பதைச் சுட்டிக்காட்டும் அறிகுறிகளாக இருக்கலாம்.

எனினும், முடி வளரும் விதம் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மரபியல் காரணிகள், ஹார்மோன் மாற்றங்கள் மற்றும் வயது போன்ற காரணிகளும் இதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே, கால் விரல்களில் முடி இல்லாததை மட்டும் வைத்துக்கொண்டு, அது இதயப் பிரச்சினைகளுக்கான உறுதியான அறிகுறி என்று முடிவு செய்துவிடக் கூடாது. ஆனால், உடலில் ஏற்படும் திடீர் மாற்றங்களை ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது.

நமது இதய ஆரோக்கியத்தைப் பேணிக்காக்க, தினமும் உடற்பயிற்சி செய்தல், சமச்சீரான உணவை உட்கொள்ளுதல், சர்க்கரை மற்றும் கொழுப்புப் பொருட்களின் நுகர்வைக் குறைத்தல், மற்றும் புகைபிடிக்கும் பழக்கத்தைக் கைவிடுதல் ஆகியவை மிகவும் அவசியமாகும். வழக்கமான உடல்நலப் பரிசோதனைகளைச் செய்துகொள்வதும் ஒரு நல்ல யோசனையாகும். உங்கள் உடல் வெளிப்படுத்தும் சிறிய அறிகுறிகளைக் கவனிப்பதன் மூலம், பெரிய உடல்நலப் பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அவற்றைக் கவனித்துக்கொள்ள உங்களால் இயலும்.

## உயர்ந்த பெட்ரோல், டீசல் விலை?



சென்னை, மே. 15–

நீண்ட இடைவெளிக்கு பிறகு நாடு முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்ந்தது. மேற்காசியாவில் நிலவும் போர் சூழலால் சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்ந்துள்ளது.

அதன்படி, நாடு முழுவதும் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.3.14 காசுகளும், டீசல் விலை ரூ3.11 காசுகளும் உயர்ந்துள்ளது. சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.103. 90க்கும், டீசல் ஒரு லிட்டர் ரூ.95.47க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளாக பெட்ரோல், டீசல் விலை உயராத நிலையில் தற்போது உயர்ந்துள்ளது.

# விரைவில் மத்திய அமைச்சரவை விரிவாக்கம்?



புதுடில்லி, மே. 15–

அமைச்சரவை மாற்றம் குறித்த பரபரப்புக்கு மத்தியில், மே 21ம் தேதி பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளது.

பிரதமர் மோடி 3.0 அமைச்சரவையின் விரிவாக்கம் மற்றும் மாற்றியமைப்பு குறித்த யூகங்கள் அதிகரித்து வரும் நிலையில், பிரதமர் மோடி மே 21ம் தேதி மத்திய அமைச்சரவையின் முக்கியக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார்; இக்கூட்டத்தில் அனைத்து மத்திய அமைச்சரவை அமைச்சர்கள், தனிப் பொறுப்பு வகிக்கும் இணை அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர். அரசு திட்ட பணிகள் செயலாக்கம், மேற்காசிய போர் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள், அமைச்சரவை மாற்றம் ஆகியவை குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தல்களில் மேற்கு வங்கத்தில் முதல் முறையாக பாஜ ஆட்சியை கைப்பற்றி உள்ளது. அசாம், புதுச்சேரியில் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது. தமிழகத்தில் அதிமுக தலைமையில் தேர்தலை சந்தித்த பாஜ தோல்வியை சந்தித்துள்ளது.

கேரளாவில் 3 இடங்களில் வெற்றி பெற்று இருந்தாலும் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. இந்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக பாஜ முன்னாள் தலைவரான அண்ணா மலை, ஆந்திராவிலிருந்து ராஜ்ய சபாவுக்கு தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத் தலைவர் பதவியில் இல்லாவிட்டாலும் அண்ணாமலை சட்டசபை தேர்தலில் மாநிலம் முழுவதும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். அதைப் பாராட்டும் வகையில் அவர் மத்திய அமைச்சரவையில் சேர்க்கப்பட வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# அமைச்சர்களின் அலுவலகங்களில் பணிபுரிய ஆர்வம்: அரசு அதிகாரிகள், ஊழியர்கள் 10,000 பேர் மனு!




சென்னை, மே. 15–

அமைச்சர் அலுவலகங்களில், பல்வேறு நிலைகளில் பணிபுரிவதற்கு, 10,000 அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மனு அளித்துள்ளனர்.

தமிழகத்தில் நிதி, வருவாய், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, பொதுப்பணி, நெடுஞ்சாலை உள்ளிட்ட, 41 துறைகள் உள்ளன. இந்த துறைகளை ஒருங்கிணைத்து, 30 முதல் 33 வரை அமைச்சர்கள் நியமிக்கப்படுவது வழக்கம். அமைச்சர்களின் அலுவலகங்களில், ஓ.ஏ., எனப்படும் அலுவலக உதவியாளர் இருவர், அமைச்சரின் இளநிலை உதவியாளர், மூத்த உதவியாளர், சிறப்பு உதவியாளர், கணினி தொழில்நுட்ப பணியாளர் உள்ளிட்டோர் நியமிக்கப்படுகின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டு கால தி.மு.க., ஆட்சியில், 33 அமைச்சர் அலுவலகங்களில், 120 பேர் வரை பணிபுரிந்து வந்தனர். தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்ததால், இவர்கள் தங்களது துறைகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

தேர்தலில், தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று, கூட்டணி பலத்துடன் ஆட்சி அமைத்துள்ளது. முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில், ஒன்பது அமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ளனர். விரைவில் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. அமைச்சர் அலுவலகங்களில் பணிபுரிய, அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் ஆர்வம் அதிகரித்துள்ளது. இதற்காக, அமைச்சர் அலுவலகங்களில் பணி நியமனம் வழங்க கேட்டு, பொதுத்துறையில், 10,000க்கும் மேற்பட்ட மனுக்கள் அளிக்கப்பட்டு உள்ளன.

இவர்களில் தகுதியான நபர்களை தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

**முதல்வர் அலுவலகத்தில் 13 பேர் நியமனம்**

அமைச்சர் அலுவலகங்களை போன்று, முதல்வர் விஜய் அலுவலகத்தில் பணிபுரிவதற்கும் ஏராளமான அதிகாரிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர். பொதுத் துறை பரிசீலனைக்கு பின், வருவாய் துறையில் பணியாற்றிய பிரேம்குமார் என்பவர், முதல்வர் அலுவலக இணை செயலராகவும், தகவல் தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றிய குமார், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் பணியாற்றிய செந்தில்குமார், தமிழ்நாடு ஆன்லைன் விளையாட்டு ஆணையத்தில் பணிபுரிந்த பழனிசாமி, மாற்று திறனாளிகள் நலத் துறையில் பணிபுரிந்த அருண் சுவேதாம்பரா ஆகியோர், துணை செயலர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இது மட்டுமின்றி, பிரிவு அலுவலர்கள் ஐந்து பேர், உதவி பிரிவு அலுவலர்கள் இருவர், உதவியாளர் ஒருவர் என மொத்தம், 13 பேர் முதல்வர் அலுவலக பணியில் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

# நடப்பாண்டில் மின் தேவையை சமாளிக்க கைகொடுக்கும் காற்றாலை மின்சாரம்!



சென்னை, மே. 15–

அக்னி நட்சத்திர காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் மாநிலம் முழுவதும் மின்சார தேவை உயர்ந்து வருகிறது. இந்த சூழலில் காற்றாலை மின்சாரம் மின்தேவையை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும்.

தமிழகத்தில் ஆண்டு தோறும் மே மாதம் தொடங்கி செப்டம் பர் மாதம் வரை காற்றாலை சீசன் நீடிப்பது வழக்கம். காற்றாலை மின் உற்பத்திக்கக மாநிலம் முழுவதும் சுமார் 10 ஆயிரத்து 100 மெகாவாட் முதல் 11 ஆயிரத்து 830 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. காற்று அதிகமாக வீசும் சீசன் காலங்களில் தினசரி சராசரியாக 4 ஆயிரம் மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தியில் குஜராத் மாநிலம் முதலிடத்தில் உள்ள நிலையில், தமிழகம் 2–வது இடத்தில் உள்ளது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள முப்பந்தல் காற்றாலைப் பண்ணை, இந்தியாவின் மிகப்பெரிய காற்றாலை மையங்களில் ஒன்றாகவும், உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது.

தமிழகத்தில் தற்போது கோடை வெயில் கடுமையாக நிலவி வருகிறது. இதன் காரணமாக வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் மின்சார பயன்பாடு அதிகரித்து. தினசரி மின்சார தேவை 21 ஆயிரம் மெகாவாட்டை நெருங்கி வருகிறது. சில பகுதிகளில் மின்தடையும் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், காற்றாலை மின்சார உற்பத்தி சீசன் தொடங்கியுள்ளதால், அடுத்த சில வாரங்களில் மின்சார உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் அதிகரித்து வரும் மின்சார தேவையை சமாளிக்க முடியும் என்று தொழில் துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் என்ன?




சென்னை, மே. 15–

2026–27–ம் கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்பு பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், தலை மை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, பள்ளிக்கல்வித் துறை பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த விளக்கத்தை வெளியிட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:–

* பள்ளி வளாகம், அனைத்து வகுப்பறைகள், சமையலறை, கழிவறைகள், தலைமை ஆசிரியர் அறை, குடிநீர் தேக்கத்தொட்டி மற்றும் கை கழுவும் இடம் ஆகிய இடங்கள் தூய்மையாகவும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.
* பள்ளியின் பெயர் பலகை தொலைவில் இருந்து பார்க்கப்படும்போது பொது மக்களின் பார்வைக்கு நன்கு புலப்படும் வகையில் வர்ணப்பூச்சுகளை கொண்டு எழுதப்பட்டிருக்கவேண்டும்.
* ஸ்மார்ட் வகுப்பறைகள், ஹைடெக் ஆய்வகங்கள், கணினிகள், மடிக்கணினிகள், கைக்கணிகள் ஆகியவற்றை தயார்நிலையில் வைத்திருக்கவேண்டும்.

# ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் 9 பேர் இடமாற்றம்!



சென்னை, மே. 15–

ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் ஒன்பது பேர், இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன் விபரம்:

பெயர் பழைய பணியிடம் புதிய பணியிடம்

விஜயகுமார் செயலர், நில சீர்த்திருத்தத் துறை செயலர், தொழில்துறை

அருண்ராய் செயலர், தொழில் துறை செயலர், உயர்கல்வித்துறை

சுப்பையன் செயலர், கால்நடை பராமரிப்பு துறை செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

ஜெயா செயலர், சிறப்பு திட்டங்கள் செயலாக்க துறை செயலர், தமிழ்நாடு இல்லம், புதுடில்லி

சண்முகம் முன்னாள் முதல்வரின் இரண்டாவது செயலர் கமிஷனர், சுற்றுலாத்துறை

அருண் தம்புராஜ் கலெக்டர், சேலம் இயக்குனர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை

இளம்பகவத் முன்னாள் கலெக்டர், தூத்துக்குடி கலெக்டர், சேலம்

பிருந்தாதேவி முன்னாள் கலெக்டர், சேலம் இயக்குனர், கலை மற்றும் பண்பாட்டுத் துறை

உமாநாத் முன்னாள் முதல்வரின் முதல் செயலர் நிர்வாக இயக்குனர், உணவு நுகர்பொருள் வாணிப கழகம்

# வேலை வாய்ப்பு

## எஸ்.பி.ஐ. 100 காலியிடங்கள்!

**SBI Recruitment 2026**

- Vacancy: 100
- Post Name: Trade Finance Officer (MMGS-II)
- Qualification: Any Degree + Certification in Forex Operations
- Selection Proces: Short Listing, Interview

நிறுவனத்தின் பெயர்: ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா
அறிவிப்பு எண்: CRPD/SCO/2026–27/05
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 100 வர்த்தக நிதி அதிகாரி (MMGS–II) பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 13.05.2026
கடைசி தேதி: 02.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://sbi.bank.in/Jothidam

# தேனி மாவட்ட அளவில் இளையோருக்கான கலைப்போட்டிகள்; கலெக்டர் தகவல்!

தேனி, மே. 15–

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் சவகர் சிறுவர் மன்றம் வாயிலாக 2025–2026 ஆம் நிதியாண்டில் 5–8, 9–12, 13–16 வயது வரை சிறார்களுக்கிடையே கலை ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் குரலிசை, பரதநாட்டியம், கிராமிய நடனம் மற்றும் ஓவியம் ஆகிய 4 பிரிவுகளில் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு 9–12, 13–16 ஆகிய வயது வரையில் தேனி மாவட்ட அளவில் இளையோருக்கான கலைப்போட்டிகள் 17.06.2026 புதன்கிழமை அன்று தேனி பங்களாமேடு பகுதியில் உள்ள நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் காலை 10.00 மணி முதல்நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கு, குழுவாக போட்டியில் பங்கு பெற அனுமதியில்லை. தனிநபராக அதிக பட்சம் 5 நிமிடம் நிகழ்ச்சி நடத்திட அனுமதிக்கப்படுவார்கள். கிராமிய நடனத்தில் கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், காளை ஆட்டம், மயிலாட்டம், மரக்கால் ஆட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், தப்பாட்டம் (பறையாட்டம்) மலைமக்கள் போன்ற பாரம்பரிய கிராமிய நடனங்கள் அனுமதிக்கப்படும்

ஓவியப்போட்டியில் பங்கேற்பவர்களுக்கான ஓவிய தாள்கள் மட்டுமே வழங்கப்படும். அக்ரிலிக் வண்ணம் மற்றும் நீர் வண்ணம் மட்டுமே பயன்படுத்த வேண்டும். நடுவர்களால் கொடுக்கப்படும் தலைப்பில் மட்டுமே ஓவியங்கள் வரையப்பட வேண்டும். அதிகபட்சம் 3 மணி நேரம் வரைய அனுமதிக்கப்படுவார்கள்.

மாவட்ட அளவிலான போட்டியில் 9–12, 13–16 வயது வகை சிறார்களுக்கிடையே நடைபெறும் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெறுபவர்கள் மாநில அளவிலான கலைப்போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

மேலும் விவரம் வேண்டுவோர் கலை பண்பாட்டுத்துறையின் மதுரை மண்டல அலுவலகத்தின் தொலைபேசி எண் 0452–2566420 மற்றும் 8870340186, 9944573528 என்ற எண்களை தொடர்பு கொண்டு விவரங்கள் பெறலாம். இவ்வாய்ப்பினை 5 வயது முதல் 16 வயது வரையிலான சிறார்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்கள்.

## தங்கம் விலை குறைந்தது..!



சென்னை, மே. 15–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.800 குறைந்து, ஒரு சவரன் 1,19,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.100 குறைந்து ஒரு கிராம் ரூ.14,950–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.10–ம், கிலோவுக்கு ரூ.10 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.305–க்கும், ஒரு கிலோ ரூ.3 லட்சத்து 5 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



(முன்னாள் கடலூர் மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ் IAS அவர்கள் செய்தி துறை இயக்குனராக பொறுப்பேற்று உள்ளார் அவர் பல வளங்களும் பெற்று சிறப்பாக நிர்வாகம் நடத்திட வாழ்த்துக்கள்.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# கவர்னரை சந்திக்க எடப்பாடி பழனிசாமி திட்டம்..?

சென்னை, மே. 15–

கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்திக்க எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. கவர்னர் தற்போது கேரளாவில் இருப்பதால் சென்னை வந்ததும் அவரை சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது. எடப்பாடி தரப்பு எம்.எல்.ஏ.க்கள் புகார் அளித்துள்ள நிலையில் இந்த சந்திப்பு நடைபெற உள்ளது.

மேலும் சென்னையில் உள்ள எடப்பாடி பழனிசாமி இல்லத்தில் நிர்வாகிகளுடன் எடப்பாடி ஆலோசனை நடத்தி வருகிறார்.

மாநிலங்களவை எம்.பி.க்கள் இன்பதுரை, தனபால் உள்ளிட்டோர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்துள்ளனர். மேலும் வழக்கறிஞர்களுடனும் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தி வருகிறார். ஆதரவாக எஸ்.பி.வேலுமணிக்கு இருந்த கே.சி.வீரமணி, எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு திடீர் ஆதரவு தெரிவித்துள்ளார். நேற்று வரை எஸ்.பி.வேலுமணியுடன் இருந்தேன்; இன்று எனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டேன் என கே.சி.வீரமணி கூறியுள்ளார்.



இதற்கிடையில், சட்டமன்ற கொறடா விவகாரம் குறித்து சி.வி. சண்முகம் அலுவலகத்தில் எஸ்.பி.வேலுமணி ஆலோசனை நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

## எஸ்.பி.வேலுமணி அணியில் இருந்து எடப்பாடி பழனிசாமி அணிக்கு தாவிய கே.சி.வீரமணி!



சென்னை, மே. 15–

எஸ்.பி.வேலுமணிக்கு தரப்புக்கு ஆதரவாக இருந்த கே.சி.வீரமணி எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு திடீர் ஆதரவு தெரிவித்துள்ளார். நேற்று வரை எஸ்.பி.வேலுமணியுடன் இருந்தேன்; இன்று எனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டேன். எடப்பாடி பழனிசாமிதான் பொதுச்செயலாளர்; அவர் பின்னாலே பயணிப்போம். அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் அனைவரும் பயணிக்க வேண்டும் என கூறினார்.

## அரசு ஓய்வூதியம், குடும்ப நல ஓய்வூதியம் பெறுவோருக்கு 58%இல் இருந்து 60%ஆக அகவிலைப்படி உயர்வு: நிதித்துறை அறிவிப்பு!

சென்னை, மே. 15–

அரசு ஓய்வூதியம், குடும்ப நல ஓய்வூதியம் பெறுவோருக்கு 58%இல் இருந்து 60%ஆக அகவிலைப்படி உயர்ந்துள்ளது என நிதித்துறை அறிவித்துள்ளது. ஓய்வூதியர்களுக்கும் 2026 ஜன.1 என முன்தேதியிட்டு அகவிலைப்படி உயர்வு அமலாகும் எனவும் தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

## சென்னையில் 5 நாட்கள் தங்க நகை மதிப்பீட்டாளர் பயிற்சி!



சென்னை, மே. 15–

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;–

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சென்னையில் "தங்க நகை மதிப்பீட்டாளர் பயிற்சி" 18.05.2026 முதல் 22.05.2026 வரை ஐந்து நாட்கள் நடைபெற உள்ளது. காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இப்பயிற்சி, இந்நிறுவன வளாகத்தில் நடைபெறும்.

பயிற்சியின் உள்ளடக்கம்

இப்பயிற்சியில் தங்கம், வெள்ளி, போன்ற உலோகங்களின் தரம் அறிதல்.

கேரட் மதிப்பீடுகள்.

ஆசிட் சோதனை.

எடை அளவு இணைப்பான்.

விலை நிர்ணயிக்கும் முறை (Board Rate).

ஹால் மார்க் மற்றும் போலியான நகைகளை அடையாளம் காணும் நடைமுறைகள் போன்றவை கற்றுத்தரப்படும்.

மேலும் ஆபரணக் கடனுக்கான கணக்கீட்டு முறைகள்.

தங்க அணிகலன் வகைகள் பற்றிய பயிற்சியும் அளிக்கப்படும்

# எந்த தியாகமும் செய்ய தயார்: பழனிசாமி அறிவிப்பு!

சென்னை, மே. 15–

ஆறு அமைச்சர்கள், 10 வாரிய தலைவர் பதவிகளுக்காக, சில முன்னாள் அமைச்சர்கள், அ.தி.மு.க.,வுக்கு துரோகம் செய்வதாக, அக்கட்சியின் பொதுச்செயலர் பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார். அவரது அறிக்கை: சட்டசபை தேர்தலில், அ.தி.மு.க., வெற்றி வாய்ப்பை இழந்த நிலையில், வெற்றி பெற்ற சில முன்னாள் அமைச்சர்கள், ஆளும் கட்சியுடன் இணைந்தால், ஆறு அமைச்சர்கள், 10 வாரிய தலைவர் பதவிகள் கொடுக்கப்படும் என்ற ஆசை வார்த்தைக்கு மயங்கி, கட்சியின் அதிகாரப்பூர்வ கொறடா உத்தரவிற்கு மாறாக, அரசின், நம்பிக்கை கோரும் தீர்மா னத்திற்கு ஆதரவாக ஓட்டளித்துள்ளனர். இது, அ.தி.மு.க.,வுக்கு அவர்கள் செய்த மாபெரும் துரோகம். அப்படி கட்சிக்கு துரோகம் செய்தவர்கள், என் மீது பல்வேறு அவதூறுகளை சுமத்தி வருகின்றனர். இது, வேதனை அளிக்கிறது. அமைச்சர், வாரிய பதவிகளுக்காக, சுயநலத்துடன் செயல்படும், ஒரு சில முன்னாள் அமைச்சர்களிடம், அனைத்து நிலை நிர்வாகிகளும், தொண்டர்களும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எனக்கு பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், அ.தி.மு.க., மக்களுக்காக இயங்கும் என சூளுரைத்த, ஜெயலலிதாவின் நம்பிக்கையை மெய்ப்பிக்க, எந்த தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கிறேன்.



அ.தி.மு.க., இப்போது வெற்றி வாய்ப்பை இழந்தாலும், நாம் உணர்வுப்பூர்வமாக செயல்பட்டு, மீண்டும் ஆட்சி அமைக்க அரும்பணியாற்றுவோம். கட்சி மேலும் வலுப்பெற, அனைத்து நிர்வாகிகளும், தொண்டர்களும், உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார்.

# சீமானுக்கு எதிரான மேல்முறையீடு மனு விசாரணைக்கு ஏற்பு - சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு!

புதுடெல்லி, மே. 15–

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், 'ஒரு பேட்டியின்போது, எனது கருத்து அவதூறு பரப்பும் வகையில் இருப்பதாக கூறி, அப்போதைய திருச்சி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு (தற்போது டி.ஐ.ஜி.யாக உள்ளார்) வருண்குமார் ஐ.பி.எஸ். அதிகாரி, திருச்சி கோர்ட்டில் என் மீது அவதூறு வழக்கு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கின் மூலம் என்னை அரசியல்துறையில் தவறான நபராக சித்தரிக்கும் முயற்சியில் வருண்குமார் ஈடுபட்டு உள்ளார். எனவே தன் மீதான வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். முதல்கட்டமாக அந்த வழக்கின் விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். இந்த வழக்கு விசாரணையின்போது முதலில் வழக்கை விசாரிக்க தடை விதித்தும், பின்னர் நடந்த விசாரணையில் வழக்கை ரத்து செய்தும் ஐகோர்ட்டு உத்தரவிட்டது.




இந்த உத்தரவுக்கு எதிராக வருண்குமார் சார்பில் ரமேஷ்வர் பிரசாத் கோயல் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தார். இந்த மனு ஏப்ரல் 2–ந் தேதி விசாரணைக்கு வந்தபோது பதில் அளிக்க சீமானுக்கு உத்தரவிடப்பட்டது. இந்த நிலையில் இந்த மேல்முறையீடு மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, சீமான் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை. வருண்குமார் சார்பில் நீனா ஆர். நரிமன் ஆஜரானார்.

இதை பதிவு செய்து கொண்ட சுப்ரீம் கோர்ட்டு, வருண் குமாரின் மேல்முறையீடு மனு விசாரணைக்கு ஏற்கப்படுவதாகவும், மேல்முறையீடு மனு மீது விரைந்து விசாரணை நடைபெறும் என்று தெரிவித்தது விசாரணையை மே 28–ந் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

# பிரான்ஸ் சொகுசு கப்பலில் தொற்றுநோய் 1,200 பயணியர் பாதிப்பு!

பாரிஸ் மே. 15–

பிரான்சில் 1,200க்கும் மேற்பட்ட பயணியர் பயணித்த சொகுசு கப்பல் ஒன்றில் குடல் அழற்சி நோய் பாதிப்பு பரவியதன் காரணமாக, அதில் பயணித்த பயணியர் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணியருடன், 'அம்பாசிடர் குரூஸ் லைன்' நிறுவனத்துக்கு சொந்தமான 'ஆம்பிஷன்' என்ற சொகுசு கப்பல், ஐரோப்பிய நாடான பிரான்சின் போர்டோ நகரை நோக்கி சென்று கொண்டிருந்தது. இதில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானோர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள்.




இந்நிலையில், நூற்றுக்கணக்கான பயணியருக்கு திடீரென வாந்தி, வயிற்று போக்கு போன்ற பாதிப்புகள் ஏற்பட்டன.

இது தொற்று நோயாக பரவியதையடுத்து, கப்பல் நிர்வாகம் மற்றும் பிரான்ஸ் சுகாதாரத்துறை உடனடியாக நடவடிக்கை எடுத்தது. கப்பல் தற்போது பிரான்சின் ஒரு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

# முன்னணி தொழில் நிறுவனங்களின் அதிகாரிகளுடன் முதல்-அமைச்சர் விஜய் ஆலோசனை!

சென்னை, மே. 15–

தமிழக முதல்–அமைச்சராக விஜய் பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கை களை எடுத்து வருகிறார். பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் அதிரடிப்படை, போதைப்பொருள் ஒழிப்பு, மதுக்கடைகள் மூடல், என அடுத்தடுத்த அதிரடியில் இறங்கியுள்ளார். மேலும் சட்டம்–ஒழுங்கு குறித்தும் போலீஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். இந்த நிலையில், முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுடன் முதல்–அமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். சென்னை தலைமை செயலகத்தில் நடைபெறும் இந்த ஆலோசனையில் பி.எம்.டபிள்யூ., டி.வி.எஸ்., ஹட்சன் (BMW, TVS, Hudson) உள்ளிட்ட மோட்டார்நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர். புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும், ஏற்கனவே செய்யப்பட்டுள்ள முதலீடுகள் குறித்தும் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார்.




# பாகிஸ்தான் உள்நாட்டிலேயே தயாரான ஏவுகணை சோதனை வெற்றி!

இஸ்லாமாபாத், மே. 15–

நீண்ட துார இலக்குகளை மிக துல்லியமாக தாக்கும் திறன் கொண்ட, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, 'பத்தாஹ் – 4' என்ற தரையில் இருந்து செலுத்தக் கூடிய ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.

நம் அண்டை நாடான பாகிஸ்தான், கடந்தாண்டு செப்டம்பரில், 750 கி.மீ., வரை சென்று தாக்கும் பத்தாஹ் – 4 ஏவுகணை சோதனையை நடத்தியது. இந்நிலையில், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் முழுதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பத்தாஹ் – 4 ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் ராணுவம் நேற்று நடத்தியது. இது வெற்றிகரமாக அமைந்ததாகவும் கூறியுள்ளது.



அதிநவீன வழிசெலுத்துதல் கருவிகளுடன் கூடிய இந்த ஆயுத அமைப்பு, தொலைதுார இலக்குகளை மிகத் துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது என்று கூறப்படுகிறது.

# யு.ஏ.இ.,க்கு இஸ்ரேல் பிரதமர் ரகசிய பயணம்?

துபாய், மே. 15–

மேற்காசிய நாடான ஈரான் மீது அமெரிக்கா தொடுத்துள்ள போர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

போர் உச்சத்தில் இருந்தபோது, கடந்த மார்ச் 26ம் தேதி, யு.ஏ.இ., எனப்படும் ஐக்கிய அரபு எமிரேட்சின் அல் ஐன் நகருக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ரகசியமாக சென்றதாகவும், அங்கு, அந்நாட்டு அதிபர் நஹ்யானை சந்தித்து பேசியதாகவும் ஊடகங்களில் செய்தி வெளியானது.

இச்செய்தியை ஆமோதிப்பது போல், இஸ்ரேலுக்கும், எமிரேட்சுக்கும் இடையேயான உறவுகளில் இது ஒரு வரலாற்று திருப்புமுனை என, இஸ்ரேல் பிரதமர் அலுவலகமும் கருத்து தெரிவித்திருந்தது. இதற்கு எமிரேட்ஸ் மறுப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து எமிரேட்ஸ் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது:



கடந்த 2020ம் ஆண்டு கையெழுத்தான, 'ஆபிரகாம் உடன்படிக்கை' வாயிலான இரு நாடுகளுக்கும் இடையேயான துாதரக உறவு பகிரங்கமானவை. இந்த உறவுகள் ரகசியம் அல்லது மறைமுக ஏற்பாடுகளின் அடிப்படையில் அமைந்தவை அல்ல.

எனவே, ஐக்கிய அரபு எமிரேட்சின் சம்பந்தப்பட்ட அதிகாரப்பூர்வ அதிகாரிகளால் வெளியிடப்படாத வரை, பயணங்கள் அல்லது ஏற்பாடுகள் குறித்த எந்த ஒரு புகாரும், தகவலும் அடிப்படை ஆதாரமற்றவை.

இவ்வாறு தெரிவித்து உள்ளது.


ஈரானுடனான மோதலின் போது, இஸ்ரேல் தன் வான் பாதுகாப்பு அமைப்புகளையும், ராணுவ வீரர்களையும் ஐக்கிய அரபு எமிரேட்சில் நிலை நிறுத்தியதாக இஸ்ரேலுக்கான அமெரிக்க துாதர் மைக் ஹக்கபியின் கருத்துகளை தொடர்ந்து இக்கருத்து வெளியாகி உள்ளது.

# சொந்தமாக யூடியூப் சேனலை உருவாக்குவது எப்படி?

சென்னை, மே. 15–

தமிழக அரசின் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;–

தமிழக அரசின் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII TN), சென்னை சார்பில்,




"சொந்த YouTube சேனலை உருவாக்குவது எப்படி" என்ற தலைப்பில் மூன்று நாள் பயிற்சி திட்டம் 25.05.2026 முதல் 27.05.2026 வரை தினமும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை EDII–TN வளாகம், சென்னை 600 032 இல் நடைபெற உள்ளது.

இந்த பயிற்சியில் டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்கம் மற்றும் ஆன்லைன் விளம்பர முறைகள் குறித்து பயிற்சி வழங்கப்படும். பயிற்சியில் இடம்பெறும் தலைப்புகள் பின்வருமாறு:

வீடியோ மற்றும் ஸ்லைடு ஷோ உருவாக்குதல்

சமூக வலைதள சந்தைப்படுத்தல் மற்றும் சமூக வலைதள இணைப்பு

வாடிக்கையாளர் வலையமைப்பை அதிகரிக்கும் முறைகள்

திறமையான மார்க்கெட்டிங் மற்றும் விளம்பர நுட்பங்கள்

ஆன்லைன் மார்க்கெட்டிங் முறைகள்

டொமைன் பெயர் மற்றும் ஹோஸ்டிங் தொடர்பான அறிமுகம்

இணையதள வடிவமைப்பு நுட்பங்கள் மற்றும் விதிமுறைகள்

இந்த பயிற்சி, YouTube சேனலை தொடங்கி திறமையாக நிர்வகிக்க விரும்பும் தொழில் முனைவோர், மாணவர்கள் மற்றும் உள்ளடக்க உருவாக்குநர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் ஆண்/பெண் /திருநங்கைகள்/ திருநம்பிகள்/ 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். குறைந்தபட்ச கணினி அறிவு வேண்டும். 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். பயிற்சியில் பங்கேற்கும் பயிற்சியாளர்களுக்கு குறைந்த கட்டணத்தில் தங்கும்

வசதி வழங்கப்படும். தங்கும் வசதி தேவையுள்ளவர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

இப்பயிற்சி தொடர்பான கூடுதல் விவரங்களை அறிய விரும்புவோர் www.editn.in என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம். அலுவலக வேலை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

முகவரி: தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், எண் 1, EDI இன்ஸ்டிடியூட் சாலை, SIDCO தொழில்துறை எஸ்டேட், ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி, சென்னை 600032.

தொலைபேசி / கைபேசி: 9360221280 / 8668100181

முன்பதிவு அவசியம். பயிற்சியின் முடிவில் அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சினிமா துளிகள்..!

### அர்ஜுன், அபிராமி நடித்துள்ள 'ப்ளாஸ்ட்' படத்திற்கு தேதி குறிச்சாச்சு!!



ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ், கல்பாத்தி எஸ். சுரேஷ் தயாரிப்பில் 'ஆக்ஷன் கிங்' அர்ஜுன், அபிராமி, பிரீத்தி முகுந்தன் நடிக்கும் படம் 'ப்ளாஸ்ட்' (Blast).

குடும்பத்துடன் பார்த்து ரசிக்கக்கூடிய வகையில் உருவாகி உள்ள இப்படத்தை புதுமுக இயக்குநர் சுபாஷ் கே. ராஜ் இயக்கி உள்ளார். இவர் பிரதீப் ரங்கநாதனின் உதவி இயக்குநர் ஆவார். அருண் ராதாகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்ய, பிரதீப் E ராகவ் படத்தொகுப்பை மேற்கொண்டுள்ளார். 'கே.ஜி.எஃப்' புகழ் இசையமைப்பாளர் ரவி பஸ்ரூர் இப்படத்திற்கு இசை அமைத்தன் மூலம் தமிழில் அறிமுகமாகி உள்ளார்.

ஜான் கொக்கென், விவேக் பிரசன்னா, அர்ஜுன் சிதம்பரம் ஆகியோர் நடித்துள்ள இப்படத்திற்கு U/A சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 'ப்ளாஸ்ட்' படத்தின் வருகிற 28–ந்தேதி முதல் திரையரங்குகளில் வெளியாகும் என படத்தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020